DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.235/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 17 | நாள் | : | 19.02.2026 |
| பெயர் | : | சித்திரை கலா | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19th day of February 2026.

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பரங்குன்றம் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். நான் இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 28.07.2018 அன்று ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் இரவு 7 மணிக்கு மேல மரத்தோணி பகுதிக்கு சென்று பார்த்தபோது பெண் சடலம் தலையில் கம்பால் அடித்த காயங்களுடன் கிடப்பதாக கேள்விப்பட்டு ஆய்வாளர் பார்வையிட்டு மேற்படி சடலத்தை பாதுகாக்கும்பொருட்டு சீனிவாசக கண்ணன் என்பவரை நியமித்து அவர் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். பின்னர்

அதே தினம் இரவு 10.30 மணிக்கு சார் ஆய்வாளர் கலை சந்தனமாரி நிலையத்தில் இருக்கும்போது அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த முருகலட்சுமி என்பவர் அனுமதிக்கப்பட்ட விவரம் தெரிந்து உதவி ஆய்வாளர் மேற்படி முருகலட்சுமி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலைய கு.எண்.234/2018 வழக்காக பதிவு செய்து என் பார்வைக்கு வைத்தார். நான் விசாரணை நகலை எடுத்துக் கொண்டு 29.07.2018 ம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் முத்துக்குமார் அவரது உதவியாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தேன் வரைபடம் அ.சா.ஆ.22 ஆகும். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த சவுக்கு கட்டையையும், ஒரு ஜோடி ரப்பர் செருப்புகளையும், அங்கிருந்து இரத்தம்பட்ட கரம்பை மண் மற்றும் இரத்தம்படாத கரம்பை மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். இரத்தம்பட்ட மண் சா.பொ.7 ஆகும், இரத்தம்படாத மண் சா.பொ.8 ஆகும். பின்னர் சாட்சிகள் தண்டாயுதபாணி, கருப்பசாமி, பாலமுருகன், மாரியப்பன், முத்துக்குமார், ராமகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நிலையம் திரும்பி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 29.07.2018 மதியம் 12.00 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை பிணவறையில் வைத்து சடலத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.23 ஆகும்.

பின்னர் இறப்பின் அறிவியல் காரணம் அறியும் பொருட்டு சடலக் கூராய்வு செய்து அறிக்கை தரும்படி தலைமைக்காவலர் அக்சாள் என்பவர் மூலம் 1.40 மணிக்கு வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து கடவுச் சீட்டு வழங்கினேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.24 ஆகும். சாட்சிகள் ராமமூர்த்தி, முத்தராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருமதி அக்சாள் சடலக்கூராய்வு முடித்து சடலத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை என்னிடம் ஆஜர்படுத்தியதை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் அக்சாள், கலை சந்தனமாரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.07.2018 அன்று மேலும் சாட்சிகள் சந்திரசேகர், மோகன்ராஜ், முருகன், சீனிவாசகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோனவரின் உடல் உள்ளுறுப்புகளை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றுத் தரும்படி திருமதி அக்சாள் என்பவரின் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அவருக்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ.25 ஆகும். பின்னர் எதிரி கருப்பசாமி என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவரை சிகிச்சை முடிந்து வெளியே வந்த நிலையில் 09.08.2018ம் தேதி திருநெல்வேலி ஹைகிரவுண்ட் பேருந்து நிறுத்தத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் உதயகுமார், அஜித்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர்

எதிரி சம்பவ இடத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அடையாளம் காட்டினார். பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் புகார்தாரர் முருகலட்சுமிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முத்துக்குமார் என்பவரை 20.08.2018 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் முருகலட்சுமி, தண்டாயுதபாணி, கருப்பசாமி, பாலமுருகன் ஆகியோர்கள் வாக்குமூலம் கொடுக்க தயாராக இருப்பதாக கூறியதால் அவர்களை நீதிமன்ற உத்தரவுப்படி 30.08.2018 ம் தேதி சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். பின்னர் 21.09.2018 ம் தேதி சடலக்கூராய்வு நடத்தி அறிக்கை வழங்கிய மருத்துவர் மாரிராஜ் மற்றும் தடய அறிவியல் அலுவலர் திரு. குருசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமைக் காவலர் பாலமுருகன் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து பெற்று தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நீதித்துறை நீதிமன்ற தலைமை எழுத்தர் கலாமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடய அறிவியல் அலுவலர் வழங்கிய இரசாயண பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.26 ஆகும். உடல் உள்ளுறுப்புக்கான அறிக்கை அ.சா.ஆ.27 ஆகும். நிணநீர் ஆய்வறிக்கை அ.சா.ஆ.28 ஆகும். பின்னர் 03.10.2018 அன்று முன்னதாக இருந்த சட்டப்பிரிவுகளை மாற்றி இதச பிரிவு 294(பி), 307, 302, 341, மற்றும் 4 of TNPHW சட்டத்தின் கீழ் மாற்றம் செய்து சட்ட மாறுதல்

அறிக்கையை அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.29 ஆகும். பின்னர் நான் சேகரித்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம் காணப்பட்டதால் அன்றையதினமே எதிரிமீது மாற்றப்பட்ட சட்டப்பிரிவுகளின்கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது**

சாட்சி மதுரை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.அஜய்குமார் (Assistant Programmer), Principal District and Sessions Court, Madurai என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.19 17:59:23 +0530